# 3

## யூதா நாட்டின் பெயர் அறியப்படாத தீர்க்கதரிசி

# பொய்யை நம்புதல்

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 13*

யாரேனும் ஒருவர் உங்களிடத்தில், "நீங்கள் எதை நம்புகின்றீர்கள் என்பது பிரச்சனையல்ல. அந்த விஷயத்திற்கு நீங்கள் உண்மையுள்ள வர்களாய் இருக்கின்றீர்களா இல்லையா என்பதுதான் முக்கியமானதாகும். உபதேசம் ஒரு பொருட்டல்ல; உங்கள் இருதயமே பொருட்படுத்தப் படுகிறது" என்று எப்போதாவது கூறக் கேட்டிருக்கின்றீர்களா? நீங்கள் அனேகமாகக் கேட்டிருக்கலாம். நாம் யாவருமே இவ்வாறு கூறக் கேட்டிருக்கின்றோம். வேதாகமம் நமது வழிகாட்டியாக இருப்பதால், முக்கியமான கேள்வியொன்று எழுப்பப்பட வேண்டும்: மதத்திற்கு இந்த அணுகுமுறை உண்மையானதா? இதை நாம் காண்போம்.

நாம் யெரொபெயாமை விட்டு விலகி வருவதற்கு முன்பு, அவர் புதிதாய்க் கட்டிய பலிபீடத்திற்கு முன்பாக அவரைக் கடிந்துகொண்ட, யூதா நாட்டின் பெயர் அறியப்படாத தீர்க்கதரிசியைச் சற்றே விவரமாக ஆழ்ந்து சிந்திப்போம். இந்த தீர்க்கதரிசி இவ்வுலகத்தில் சத்தியத்திற்கும் தவறுக்கும் இடையில், கீழ்ப்படிதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் இடையில் தொடர்ந்து நடக்கும் யுத்தத்தை நமக்கு நினைவூட்டுகின்றவராய் இருக்கிறபடியால், நமது விசேஷித்த ஆர்வத்திற்கு உரியவராகின்றார்.

"சிறிய, கபடற்ற/வெகுளித்தனமான பொய்கள்," என்ற சொல் விளக்கத்தை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கலாம், ஆனால் எந்தப் பொய்யும் சிறியதாகவோ அல்லது கபடற்றதாகவோ எந்தக் காலத்திலும் இருப்ப தில்லை என்பதை நாம் நினைவில் வைத்தாக வேண்டும். சிலபொய்கள் சிறியவையாக அல்லது கபடற்றவையாகக் காணப்படலாம், ஆனால் அவை ஒருக்காலும் அவ்வாறு இருப்பதில்லை, இந்த சத்தியத்திற்கு வேதாகமத்தில் பதிவாதாரத்தைச் சுமந்து நிற்கும் ஒரு நபர், யூதா நாட்டில் இருந்த வந்த பெயர் அறியப்படாத தீர்க்கதரிசியாவார். இந்த சத்தியத்தைக் கண்ணோக்கு வதற்காக, நாம் இவர் யெரொபெயாமைக் கடிந்துகொண்டதற்குப் பின்பு நடந்த இவரது வரலாற்றை எடுத்துக் காண்பது அவசியமாகும்.

தேவன் வரலாற்றுரீதியாக யெரொபெயாமைப் பழித்துரைத்து வெளிப்படையாகச் சிறுமைப்படுத்தியதைத் தொடர்ந்து, தேவன் யெரொ பெயாமுக்கு மனந்திரும்ப ஒரு வாய்ப்பளிப்பதைத் தேர்ந்துகொண்டார். யெரொபெயாமின் கையும் தோளும் குணமாக்கப்பட்டன, கடைசி நியாயத்தீர்ப்பு சற்றுக்காலத்திற்கு நிறுத்திவைக்கப்பட்டது. நிம்மதி மற்றும் சற்றுநேர நற்-சித்தம் ஆகியவற்றுடன், யெரொபெயாம் அந்தத் தீர்க்க

*தரிசியைத் தன்னுடன் அரண்மனைக்கு வந்து உணவு உண்டு இளைப்பாறிச் செல்லும்படியும், தாம் அவருக்குச் சன்மானம் தருவதாகவும் கூறி அழைத்தார். என்ன ஒரு அழைப்பு! "நான் அரசரைக் கடிந்து கொண்டேன், அவர் அதற்காக என்னை உணவு உண்ணும்படி அவரது அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்" என்று கூறக்கூடியவராய் இருக்க விரும்பாத யாராவது உண்டா?*

*[ஆனால்] அந்தத் தீர்க்கதரிசி, "நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை. ஏனென்றால் 'நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும் பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்' " என்று கூறியபோது (13:8, 9) தமது உண்மை யான தலைவர்மீது தாம் கொண்டிருக்கும் பற்றுறுதி எவ்வகைப்பட்டது என்பதைக் காண்பித்தார். இந்தத் தீர்க்கதரிசியின் வாழ்வு, வரலாற்றின் இப்பகுதியுடன் முடிந்திருக்கும் என்றால், இவரை நாம் வேதாகமத்தின் மாபெரும் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று கருதியிருப்போம். இவரைப் பற்றி நாம், "இம்மனிதர் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்தவர்களிலேயே மாபெரும் மனிதர்களில் ஒருவராயிருக்கின்றார். இவர் தமது இருதயத்தை ஒரே விஷயத்தில் - தேவனுடைய சத்தியத்தில் - அமையச் செய்து இருந்தார். இவர் மற்ற எவரொருவராலும் - வலிமைமிகுந்தவர் அல்லது சாதாரணக் குடியானவர் ஆகிய எவராலும் - தேவனுடைய சித்தத்தில் இருந்து புறம்பே விலகிச் செல்லுவதற்கு இணங்கச் செய்யப்பட இயலாதவராயிருந்தார். அவர் தேவனுடைய சத்தியத்தை மாத்திரம் அறிவிப்பதற்குத் தம்மை அர்ப்பணித்திருந்த உண்மையான தீர்க்கதரிசியாய் இருந்தார், மற்றும் அதை அவர் பயமோ பட்சபாதமோ இன்றி செய்தார்" என்று கூறியிருப்போம். இருப்பினும், வரலாற்றின் எஞ்சிய பகுதியானது, இம்மனிதரின் இன்னொரு சித்தரிப்பை நமக்கு அளிக்கிறது.*

*யூதா நாட்டில் இருந்து வந்த தீர்க்கதரிசி தமது கழுதையின்மீதேறி, இல்லம் நோக்கிப் பயணம் தொடங்கி தாம் வந்தபோது, பயணித்திருந்த வழியைவிட்டு வேறொரு வழியில் செல்வதை உறுதிப்படுத்திக் கொண்டார். பெத்தேல் முழுவதிலும், பலிபீடத்தில் யெரொபெயாமுக்கு நடந்த விஷயம் பற்றிய பேச்சு பரவியிருந்திருக்க வேண்டும். அந்த நிகழ்ச்சிகளைக் கண்ட சில இளைஞர்கள் இல்லம் திரும்பி, நடந்த எல்லாவற்றையும் தங்கள் தந்தையான முதிய தீர்க்கதரிசியிடம் கூறினர். தமது மகன்களிடத்தில் இருந்து கேட்ட விஷயத்தினால் தூண்டப்பட்டார் என்பதைத் தவிர இந்த முதிய தீர்க்கதரிசி பற்றி நாம் வேறு எதுவும் அதிகமாக அறியவில்லை. "அவன் எந்த வழி போனான்?" என்று அவர்களிடத்தில் அவர் கேட்டார் (13:12). அதை மகன்கள் அறிந்திருந்தனர். பலிபீடத்தின் அருகில் இருந்த ஒவ்வொருவரும், அந்த இளம் தீர்க்கதரிசி யூதாவுக்குத் திரும்பிச் செல்ல எந்த வழியில் பயணித்தார் என்பதை அறிந்திருந்தனர், தீர்க்கதரிசி அரசருக்குப் பதில் அளித்த பின்பு, சந்தேகத்திற்கு இடமின்றி அவர் திரும்பி, அரசரின் பிரசன்னத்தில் இருந்து வெளிநடந்து, தமது கழுதையின் மீதேறி,*

*சத்தியத்திற்கான தமது நாளின் போராட்டத்தில் முடிவெடுத்தலென்ற இடர்ப்பாடு மிகுந்த வேளையில் வெற்றி பெற்ற அரசியல்வாதியைப்போல் மிடுக்குடன் சென்றிருந்தார். இந்தக் காட்சியைக் கண்ட மக்கள் யாவரும், அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதை தங்கள் கண்களினால் கவனமாய்ப் பின்தொடர்ந்து, அவரது கழுதையானது காட்சியில் இருந்து மறையும் வரையில் அவரது அசைவுகள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர் காட்சியில் இருந்து மறைந்தபின்பு, அவர்கள் ஒருவேளை சில நிமிடங்கள் அமைதியான குசுகுசுப்புடன் அசைவின்றி நின்றிருந்து - பின்பு, ஒருவர்பின் ஒருவராகத், தங்கள் இல்லங்களுக்குப் பேச்சின்றி, தாங்கள் கண்டவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டே அமெரிக்கையுடன் சென்றிருக்கலாம். ஆம், அவர் சென்ற சாலையைப் பற்றி அந்த முதிய தீர்க்கதரிசியின் மகன்கள் அறிந்திருந்தனர். ஏனென்றால் அவர்கள் அம்மனிதர் தம்மை அனுப்பின தெய்வீகமானவரிடத்தில் திரும்பும் ஒரு தூதன்போன்று அவ்விடத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றதை அவர்கள் கவனித்திருந்தனர்.*

*நகரத்தில் இருந்து வெளியே செல்ல அந்தத் தீர்க்கதரிசி எந்தப் பாதையை மேற்கொண்டார் என்று அறிந்தபின்பு, அம்முதிய தீர்க்கதரிசி விரைவிலேயே தமது கழுதையின் மீதேறி அவரைப் பின்தொடர்ந்தார். அவர் தேவனுடைய மனிதர் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருப்பதை, தமது பயணத்தைத் தொடரும் முன்பு சற்று ஓய்ந்திருப்பதைக் கண்டார். அந்த முதிய தீர்க்கதரிசி ஏன் அவரிடத்தில் பின்வருமாறு பேசினார் அல்லது செயல்பட்டார் என்பதை நாம் அறிவதில்லை.[1] அந்த முதிய தீர்க்கதரிசி அவரிடத்தில், "என்னோடே வீட்டுக்கு வந்து அப்பம் புசியும்" என்றார் (13:15). முதலில் அந்த இளைய தீர்க்கதரிசி பிடிவாதத்துடன் அந்த அழைப்பை, இதற்கு முன்பு அவர் யெரொபெயாமிடம் செய்திருந்தது போலவே மறுத்தார். அவர் பின்வருமாறு கூறினார்,*

> *நான் உம்மோடே திரும்பவும் உம்மோடே உள்ளே போகவு மாட்டேன்; இந்த ஸ்தலத்திலே உம்மோடே நான் அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவுமாட்டேன். ஏனென்றால் "நீ அப்பம் புசியாமலும், அங்கே தண்ணீர் குடியாமலும், நீ போன வழியாய்த் திரும்பாமலும் இரு என்று கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிருக்கிறது" (13:16, 17).*

*ஏதோ காரணத்தினால், அம்முதிய தீர்க்கதரிசி, பிசாசினால் ஏவப்பட்டுப் பின்வருமாறு கூறினார்:*

> *உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; "அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா" என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் (13:18).*

*மிகமுக்கியத்துவமான இவ்வார்த்தைகள் பின்தொடருகின்றன: "அவனிடத்தில் பொய் சொன்னான்" (13:18). அவ்வார்த்தைகளை மெது வாகவும் சிந்தனை நிறைந்த வகையிலும் வாசியுங்கள். இவ்விடத்தில் நாம்*

*அந்த இளம் தீர்க்கதரிசியின் உண்மையான ஆத்துமாவைக் காணுகின்றோம். அவர் உண்மையிலேயே தேவனுக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுத்தவராய் இருந்தாரா, அல்லது அவர் அதைப்பற்றிச் சிந்திப்பதில் இலேசான பாகம் ஒன்றைக் கொண்டிருந்தாரா? அவர் ஒரு அரசரைக் கடிந்துரைத்திருந்தார், ஆனால் அவர் பொய்யுரைத்த ஒரு முதிய தீர்க்கதரிசியினால் முட்டாளாக்கப்படுவாரா? இந்தக் கேள்விகளுக்கான பதில் 19ம் வசனத்தில் தரப்பட்டுள்ளது: "அப்பொழுது அவன் இவனோடே திரும்பிப் போய் இவன் வீட்டிலே அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தான்." வரலாறு விவரிக்கப்படுவதை நாம் கவனிக்கையில், "இல்லை! இல்லை! பொய்யான வாக்கினால் தவறாய் நடத்தப்படாதே. கர்த்தருடைய வசனத்திற்கு உண்மையுள்ளவனாக நிலைத்திரு!" என்று கூறி நமது இருதயம் அவரை நோக்கிக் கதறுகிறது. அவர் அம்மரத்தடியை விட்டு அந்தத் தீர்க்கதரிசியின் இல்லம் நோக்கிச் செல்லுகையில், விசுவாசநிறைவில் இருந்து விசுவாசமின்மைக்கான பயணத்தை, மாபெரும் தீர்க்கதரிசியாய் இருப்பதில் இருந்து தீர்க்கதரிசியாய் "இருந்தவர்" என்ற நிலையை அடைவதை, உயிருடன் உள்ள தீர்க்கதரிசி என்ற நிலையில் இருந்து இறந்து போனவர் என்ற நிலையை அடைவதை நாம் கவனிக்கையில் நமது இருதயம் [துக்கத்தில்] மூழ்குகிறது.*

*அந்த முதிய தீர்க்கதரிசியின் வீட்டில் உணவு உண்ண அமருகையில், அந்த இளம் தீர்க்கதரிசியின் எதிர்காலம் பற்றிப் பின்வருமாறு தீர்க்கதரிசனம் உரைக்கும்படி, பரிசுத்த ஆவியானவர் அந்த முதிய தீர்க்கதரிசியைக் கட்டுப்படுத்தினார்:*

> *"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, 'அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால்', உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (13:21, 22).*

*அந்த நாளின் பிற்பகுதியில், அந்த இளம் தீர்க்கதரிசி தமது இல்லம் திரும்புகையில், அவர் ஒரு சிங்கத்தினால் தாக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டார். அவரது மரணம்பற்றிக் கேள்விப்பட்ட அம்முதிய தீர்க்கதரிசி, வெளியே சென்று, அவரது உடலை எடுத்து, நகரத்திற்குத் திரும்பிக் கொண்டுவந்து, அதைத் தமது சொந்தக் கல்லறையில் அடக்கம்பண்ணி, "ஐயோ, என் சகோதரனே!" என்று பெருமூச்சுட்டு துக்கித்தார். யூதாவின் இந்த தீர்க்கதரிசிக்கு நாம் நினைக்கக்கூடிய ஒரே கல்லறைக்கல் வாசகம் என்பது "ஐயோ, என் சகோதரனே! இதை ஏன் இப்படிச் செய்தாய்?" என்பதாக இருக்கிறது. அவர் தமது சொந்தப் புத்துயிர்ப்பின் மத்தியில் இருந்து புறம்பே விழுந்தார். அவர் தமது சொந்தப் பிரசங்கத்தைத் தாமே கவனிக்காத பிரசங்கியாராய் இருந்தார். அவர் பொய்யினால் வஞ்சிக்கப்பட்டவரான, சத்தியத்தின் மனிதராயிருந்தார்.*

*இந்த கவலைமிகுந்த நிகழ்ச்சியானது, தவறை நம்புவதில் உள்ள*

துன்பம் பற்றி நமது மனங்களை நேராக்கிக்கொள்ள நமக்கு உதவ வேண்டும். தவறு என்பது பாரபட்சமற்றதாக உள்ளது; அது அரசர்களையும் பிரசங்கியார்களையும் ஒன்றுபோலவே ஆக்கினைக்குள்ளாக்குகிறது. சாலையில் மரித்துக்கிடந்த அந்தத் தீர்க்கதரிசி, தேவன் சத்தியத்தின் தேவனாயிருக்கிறார் என்று நமக்குப் போதிக்கின்றார். பொய்யும் உண்மை யற்றவைகளும் முற்றிலும் தேவனுக்கு எதிரானவைகளாய் இருக்கின்றன. சத்தியம் மாத்திரமே பரலோகத்தில் இருந்து கொடுக்கப்பட்டுள்ளது, மற்றும் சத்தியம் மாத்திரமே பரலோகத்தினால் கனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் பின்னணிக்கெதிரே, பொய்யானது ஏன் இவ்வளவு பயங்கர மானதாக உள்ளது என்பதை நாம் சுலபமாய்க் காண முடியும்.

## பொய் வஞ்சனையுள்ளது

முதலாவது, பொய்யானது தவறாக வழிநடத்துவதாலும் வஞ்சனை யுடையதாக இருப்பதாலும் துன்பமானதாக உள்ளது. இந்த அம்சத்தில், இது தேவனுக்கு எதிரானதாக உள்ளது, ஏனெனில் தேவன் ஒருக்காலும் வஞ்சனை நிறைந்தவராக இருப்பதில்லை. அவரது வார்த்தை எப்போதுமே நல்லதாகவே உள்ளது. அவரைப் பற்றிய எதுவும் உண்மையற்றதாக இருப்பதில்லை. அவர் நம்மை நீதியின்பாதைகளில் நடத்துகின்றார் (சங்கீதம் 23:3).

தவறு என்பது நம்மைச் சரியானவற்றில் வழிநடத்துவதில்லை, ஆனால் உண்மையில்லாத மற்றும் உண்மைநிலையற்றவற்றில் அது நம்மை வழிநடத்துகிறது. முதிய தீர்க்கதரிசியின் வீட்டில் அந்த இளம் தீர்க்கதரிசி அப்பம் புசிப்பதும் தண்ணீர் குடிப்பதும் தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படியாத விஷயமாக இருந்தபோதிலும், அவர் தமது பொய்யைக்கொண்டு, அது சரியானதே என்று அந்த இளம் தீர்க்கதரிசியை நம்பச்செய்வதற்கு விரும்பினார். இளம் தீர்க்கதரிசி அவரை நம்பினார் மற்றும் சாவுக்கேதுவான வகையில் வஞ்சிக்கப்பட்டார்.

சிலவேளைகளில் ஒரு பொய்யானது எவ்வளவாய் நம்பப்படக் கூடியதாக உள்ளது என்பதைக் கவனியுங்கள். முதிய தீர்க்கதரிசி, தாமும் ஒரு தீர்க்கதரிசிதான் என்றும், ஒரு தூதன் தமக்குத் தரிசனமாகி, அந்த இளம் தீர்க்கதரிசிக்குத் தரப்பட்ட கட்டளையை ஒரு புதிய கட்டளையால் இடம் மாற்றினுர் என்றும் உறுதிப்படுத்தி, தமது பொய்யை மிகவும் ஈர்க்கத் தக்கதாக்கினார். அவர், தமது ஆதாரமூலம் நம்பகத்திற்குரியது என்றும், செய்தியாளராகிய தாமும் நம்பிக்கைக்கு உரியவரென்றும் வாதிட்டார். இவரது வேண்டுகோளுக்கு யூதாவில் இருந்து வந்த அந்தத் தீர்க்கதரிசி ஏன் செவிசாய்த்தார் என்பது பற்றி நமக்கு எதுவும் கூறப்படவில்லை, ஆனால் அவர் தமக்குள் இவ்வாறு சொல்லியிருக்கக்கூடும், “இவரும் ஒரு தீர்க்க தரிசியாகவே இருக்கின்றார், இவர் தமக்கு ஒரு தூதன் தோன்றியிருப்பதாகக் கூறுகின்றார். எனக்கு ஒரு தூதன் தோன்றியிருக்கவில்லை, அவர் சரியாகத்தான் கூறவேண்டும். நான் அவருடன் இல்லம் செல்வேன்.” இவ்விதமாக, அவர் தமக்குத் தேவன் இட்ட தெளிவான கட்டளையைப் புறக்கணித்து, முதிய தீர்க்கதரிசியின் வாயிலிருந்து வந்த நம்பகத்தன்மை

என்ற உடையிட்டு மூடப்பட்டிருந்த, நன்கு உடுத்துவிக்கப்பட்டிருந்த பொய்யை ஏற்றுக்கொண்டார்.

யாரோ ஒருவர், "கர்த்தர் உங்களுக்குத் தரிசனமானதைக் காட்டிலும் மிகசமீபத்தில் தனக்குத் தரிசனமானார் என்று கூறும் மனிதனை நம்புவது பற்றி மிகுந்த எச்சரிக்கையாய் இருங்கள்!" என்று கூறினார். கர்த்தர் நம் யாவருக்கும், வேதாகமமாகிய தமது வசனத்தைக் கொடுத்துள்ளார் என்பதுதான் உண்மையாய் இருக்கிறது, எவராவது மிக சமீபத்திய வேதாகமம் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்று கூறினால், அவர் ஒரு வெறிநாயைப் போன்று மிக கவனமாய்க் கவனிக்கப்பட வேண்டும். வேதவசனங்களில் தெளிவாய்க் காணப்படாத ஒரு கட்டளைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தால், அவரையல்ல, வேதவசனங்களைப் பின்பற்றுங்கள்! பவுலின் வார்த்தைகளை நினைவில் வைக்கவும்:

> நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறோரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலாத்தியர் 1:8, 9).

## பொய் அழிக்கும் தன்மையுள்ளது

பொய்யானது எப்போதும் அழிக்கும் தன்மையுள்ளது என்பது அது துன்பகரமானதென்பதற்கு இன்னொரு காரணமாகும். முதிய தீர்க்கதரிசி அந்த இளம் தீர்க்கதரிசியைத் தமது வீட்டிற்கு அழைத்தபோது, அவர் இவரை இருளுக்கு, உருச்சிதைவிற்கு, மற்றும் மரணத்திற்கு அழைத்தார். நீங்கள் யாரேனும் ஒருவருடைய ஆத்துமாவைக் கொல்ல விரும்பினால், அவர் ஒரு பொய்யை நம்பும்படியும் அந்தப் பொய்யின்படி வாழும்படியும் மட்டும் அவரை வழிநடத்திவிடுங்கள். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்படி ஒருவரை வழிநடத்தும் எவரொருவரும் - அவர் தமது ஆளுமைத்தன்மையில் எவ்வளவு பிரியப்படுத்தும் தோற்றம் கொண்டிருந்தாலும் அல்லது அவர் எவ்வளவு மேன்மையாகக் காணப்பட்டாலும் அல்லது அவரது குரல் எவ்வளவு மென்மையாக இருந்தாலும் - அவர் ஒரு நண்பராயல்ல, ஆனால் விரோதியாகவே இருக்கின்றார்.

எந்த ஒரு போதகத்தைப் பற்றியும் கேட்கப்பட வேண்டிய ஒரு நல்ல கேள்வி பின்வருமாறு: "இது எங்கே வழிநடத்துவதாய் இருக்கிறது?" தவறின் முடிவு விளைவு மரணம் என்பதாகவே உள்ளது. பொய் என்பது என்ன செய்கிறது என்று அறிய நீங்கள் விரும்புவீர்களா? சாலையோரத்தில் கிடக்கும் இளம் தீர்க்கதரிசியைக் கண்ணுற்று, "இது பொய்யை விசுவாசித்ததால் ஏற்பட்ட விளைவு" என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு பொய்யும் அழிக்கும் தன்மையுள்ளது. துன்பமற்ற பொய்

என்பது போன்ற விஷயம் எதுவும் இல்லை. பொய் சொல்லும் ஒருவன், தான் கூறுகின்ற பொய்யினால் பாதிக்கப்படுகின்றான். முதிய தீர்க்கதரிசி, தமது மனதில் இருந்து தமது உதடுகள் வழியாக ஒரு பொய்யை வெளியே அனுப்பிய போது, அவர் மதிப்பு இன்மை என்ற குழிக்குள் விழுந்து தேவனுடைய அங்கீகாரத்திற்குப் புறம்பே தம்மைத்தாமே பூட்டிக் கொண்டார். அவரது வாழ்வானது, அவருடைய தவறைக் கொண்டு தேவனுடைய வசனத்தில் என்றென்றைக்குமாகக் குறியிடப்பட்டிருக்கும். பொய்யை விசுவாசிக்கும் எவரொருவரும் பொய்யினால் பாதிக்கப்படுகின்றார். வாழ்வானது சத்தியத்துடன் இசைவிணக்கமான வகையில் வாழ்வதை நோக்கங் கொண்டுள்ளது. தவறைக்கொண்டு வாழ்வை வாழ முயற்சி செய்யும் எவரொருவரும் இருளில், தவறான புரிந்துகொள்ளுதல்களில், மற்றும் தீய விளைவுகளில் இயங்குகின்றார். தப்பிக்க வழியெதுவும் இல்லை. தவறு என்பது எப்போதுமே அதை உச்சரிப்பவரையும் அதை ஏற்றுக்கொள்பவரையும் புண்படுத்துகிறது.

## பொய் பிசாசுத்தனமானது

பொய்கள் எப்போதுமே பிசாசிடம் இருந்து வருகின்றன என்பது, பொய் துன்பகரமானதென்று கூற இன்னுமொரு காரணமாகும். நீங்கள் பொய்யைக் கேட்டும் எந்த வேளையும், பிசாசு அங்கிருக்கின்றான் என்பதை நீங்கள் அறிகின்றீர்கள். பிசாசு ஒரு பொய்யன் என்றும் பொய்க்குப் பிதா என்றும் இயேசு கூறினூர் (யோவான் 8:44). இவ்விதமாக, நாம் இவ்வரலாற்றில் பிசாசானவன் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றான் என்று முழு தைரியத்துடன் கூறமுடியும். முதிய தீர்க்கதரிசி பொய்யுரைத்தார் என்று வேதவசனங்கள் அறிவிக்கும்போது, அம்முதிய தீர்க்கதரிசி பிசாசின் செல்வாக்கின்கீழ் இருந்தார் என்று அவை கூறுகின்றன. பொய்யுரைக்கும் எவரும் பிசாசின் செல்வாக்கின்கீழ் இருக்கின்றார். பொய் சொல்லுகிறவன் பிசாசின் பிள்ளையாய் இருக்கின்றான்.

அம்முதிய தீர்க்கதரிசி, இளம் தீர்க்கதரிசியிடம் பொய்யுரைக்கலாம் என்று தீர்மானித்தது எப்போது என்பதை நாம் அறிவதில்லை; அவர் பொய்யுரைக்கலாம் என்று தீர்மானித்தது ஏன் என்பதையும் நாம் அறிவதில்லை. அவர் இவரிடத்தில் பொய்யுரைத்தார் என்பதையும், அந்தப் பொய்யின் விளைவையும் நாம் அறிகின்றோம். எனவே இந்தக் காட்சியில் இருந்து நாம், காரணம் எதுவாயிருப்பினும், அந்தத் தீர்மானம் எப்போது அல்லது எங்கே மேற்கொள்ளப்பட்டிருப்பினும், ஒரு பொய்யானது பிசாசின் வேலையாக உள்ளது, அது உலகத்தில் பிசாசின் செல்வாக்கை நோக்கி முன்னேறுகிறது என்று கண்டறிய முடிகிறது.

சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32). சத்தியம் நம்மை விடுதலையாக்கும் வழிகள் யாவற்றையும் பற்றி நினைத்துப் பாருங்கள்: அது நம்மைப் பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கிறது (ரோமர் 6:17, 18, 21, 22), இருள் மற்றும் அறியாமையில் இருந்து விடுவிக்கிறது (யோவான் 17:17; ரோமர் 1:25; 1 தெசலோனிக்கேயர் 5:3, 4), மரணத்தில் இருந்து விடுவிக்கிறது

*(ரோமர் 8:2; எபிரெயர் 2:14), நேர்மையின்மையில் இருந்து விடுவிக்கிறது (எபேசியர் 4:23-25), நியாயத்தீர்ப்பு பற்றிய பயத்தில் இருந்து விடுவிக்கிறது (யோவான் 3:18, 19, 21) மற்றும் தேவனுடைய பிரியமின்மையில் இருந்து விடுவிக்கிறது (2 தெசலோனிக்கேயர் 1:10, 11; 2:9, 10).*

*யூதாவில் இருந்து வந்த தீர்க்கதரிசியிடத்தில் இருந்து நாம் கற்றுக்கொண்டுள்ள பாடத்தை ஒருக்காலும் மறந்துவிடக்கூடாது. அது வாழ்வின் அடிப்படைத் தேர்வைக் கையாளுகிறது. எல்லாம் கூறப்பட்டு, எல்லாம் செய்யப்பட்டுள்ளபோது, வாழ்வு என்பது பின்வரும் ஒரு அடிப்படை முடிவாகிறது: நான் தேவனைப் பின்பற்றுவேனா அல்லது பிசாசைப் பின்பற்றுவேனா? தேவனைப் பின்பற்றுவது என்பது எனது முடிவாயிருந்தால், அதே வேளையில் நான் சத்தியத்தைப் பின்பற்றவும் என்னை ஒப்புக்கொடுக்கின்றேன்; ஏனெனில் தேவன் ஒளியாயிருக்கிறார், அவருக்குள் இருள் என்பது இல்லை (1 யோவான் 1:5). பிசாசைப் பின்பற்றுவது என்பது எனது முடிவாயிருந்தால், சத்தியம் ஒருபொருட்டல்ல - ஆனால் இதன் விளைவுகள் கசப்பானதாக, சாவுக்கேதுவானதாக, மற்றும் நித்தியமானதாக உள்ளன (மத்தேயு 25:41-46).*

## *முடிவுரை*

*யூதாவில் இருந்து வந்த இந்தத் தீர்க்கதரிசியின் வரலாறு, யெரொபெயாமையும் மற்றும் பொய்யை நம்பி சத்தியத்தில் இருந்து புறம்பே திரும்ப சோதிக்கப்படும் யாவரையும் கடிந்துகொள்ளவும் இவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்க்கதரிசி சத்தியத்தின்மீது தாம் கொண்டிருந்த பிடிப்பைச் சற்றே தளர்த்தியதால் விரைவான மற்றும் கடுமையான விளைவுகள் வந்துசேர்ந்தன. அவர் தேவனுடைய பிரதிநிதியாயிருந்தார், மற்றும் தேவனுடைய சத்தியம் சமரசம் செய்யப்படக்கூடாததாக இருந்தது. அவர் அதைப் பிரசங்கித்து அதன்படி வாழவேண்டியிருந்தது. இந்த சத்தியத்தை நமக்குப் போதிப்பதற்காகவே தேவன் இந்தத் தீர்க்கதரிசியின் வாழ்வை முடித்து வைக்கப் பயங்கரமான அளவையை மேற்கொண்டார். அதை நாம் கற்றுக்கொள்வோமா?*

***கற்க வேண்டிய பாடம்:***
***தவறு கொல்லுகிறது;***
***சத்தியம் ஜீவனைக் கொண்டுவருகிறது.***

---

*குறிப்பு*

*[1]இம்முதிய தீர்க்கதரிசி யூதாவில் இருந்து வந்த தீர்க்கதரிசியிடம் இம்முன்மொழிதலை வைத்தது ஏன் என்பதற்குப் பல சாத்தியக்கூறுகள் கருத்தாகக் கூறப்பட்டுள்ளன. முதலாவது, இம்முதிய தீர்க்கதரிசி, அந்த இளம் தீர்க்கதரிசியின் தைரியம் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டு, அவருடன் ஐக்கியம் கொண்டிருக்க மிகவும் விரும்பினர், எனவே அவர் தமது அதிகப்படியான*

ஊக்கத்தினால், தேவனுடைய சித்தத்தை மீறும் செயலாயிருப்பினும் அவரைத் தமது வீட்டிற்கு வரும்படி வற்புறுத்தி வேண்டிக்கொண்டார் என்று கூறப்படுகிறது. தொடக்கத்தில், இம்முதிய தீர்க்கதரிசி, சத்தியத்தை தாம் மதிக்க வேண்டியபடி மதித்திருக்கவில்லை, இல்லையென்றால் அவர் யெரொபெயாமுக்கு நடந்த யாவற்றையும் செய்கையெதுவுமின்றி வெறுமனே கவனித்துக்கொண்டு மாத்திரம் இருந்திருக்க மாட்டார். இவ்விதமாக, தேவன் தம்மிடம் பேசினார் என்பது பற்றிய கதையை அவர் புனைகையில், அவர் அந்த இளம் தீர்க்கதரிசியுடன் இருக்கும்படி ஒரு உச்சமுனைப்பகுதிக்குச் சென்றார்.

இம்முதிய தீர்க்கதரிசி, யூதாவில் இருந்து வந்த தீர்க்கதரிசியை வேண்டுமென்றே தமது அளவுக்குக் கொண்டுவர நாடினார் என்ற இன்னொரு சாத்தியக்கூறு உள்ளது. பலிபீடத்தின் அருகில் கூறப்பட்ட பழிச்சொல்லானது, இம்முதிய தீர்க்கதரிசி உட்பட, யெரொபெயாமுடைய விசுவாச விலக்கத்தில் அவருடன் சென்றிருந்த யாவரையும், அந்த விசுவாச விலக்கத்திற்கு எதிராகப் பேசாதபடியால், ஆக்கினைக்குள்ளாக்கியது. ஆகையால், அம்முதிய தீர்க்கதரிசி, ஒரு பொய்யை நம்பும்படி அந்த இளம் தீர்க்கதரிசியைப் பிடிக்க முடியுமென்றால், அவர் [முதிய தீர்க்கதரிசி] பெத்தேலில் யெரொபெயாமை அந்த இளம் தீர்க்கதரிசி கடிந்து கொண்டதன் செயல்விளைவை ஓரளவுக்கு அழிப்பவராயிருப்பார். அம்முதிய தீர்க்கதரிசி, யெரொபெயாமின் பாவங்களைக் கடிந்துரைத்திருக்க வேண்டும் மற்றும் அதையே செய்த இளம் தீர்க்கதரிசியினால் அவர் இணங்கச் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனவே, இளம் தீர்க்கதரிசியை இவ்வாறு பிடித்தல் என்பது, முதிய தீர்க்கதரிசியின் மனச்சாட்சியை சுலபப்படுத்தும் ஒரு வகையிலான வழியாயிருக்கும்.

மூன்றாவது, அந்த முதிய தீர்க்கதரிசி உண்மையிலேயே அந்த இளம் தீர்க்கதரிசியை ஒரு சோதனைக்கு உட்படுத்தி, அவர் உண்மையானவர்தானா என்று ஆய்வுசெய்தார் என்று சிலர் நினைத்துள்ளனர். அந்த இளம் தீர்க்கதரிசி எருசலேமிலிருந்து வந்திருந்தார். அவர் கலகம் விளைவிப்பதற்காகத் தெற்கு ராஜ்யத்தில் இருந்து வந்த ஒரு செய்தியாளராய் மாத்திரம் இருந்தாரா, அல்லது அவர் உண்மையிலேயே அவர்களின் பாவத்தைக் கண்டித்து உணர்த்துவதற்காகத் தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாயிருந்தாரா? அந்த இளம் தீர்க்கதரிசி, பாவம் நிறைந்த இந்த அழைப்பிற்கு உட்படுவாரென்றால், அவர் தேவனுடைய “உண்மையான” தீர்க்கதரிசியல்ல என்று நிரூபிப்பவராய் இருப்பார்.

நான்காவது, அந்த முதிய தீர்க்கதரிசி அரசரின் சார்பாக நடிப்பவராக மாத்திரம் இருந்திருக்கலாம். அவர் அரசரைத் தற்காப்பதற்காகத் தமக்குத் தாமே நியமனம் செய்துகொண்டவராய் இருந்திருக்கலாம். யெரொபெயாமினால், யூதாவில் இருந்து வந்த அந்தத் தீர்க்கதரிசியைத் தமது வீட்டிற்கு அழைத்துச்செல்ல இயலாது போய்விட்டது, எனவே அந்த முதிய தீர்க்கதரிசி, அரசரால் செய்ய இயலாத அச்செயலை நிறைவேற்ற முயற்சித்திருப்பார். அந்த முதிய தீர்க்கதரிசி அவரைத் தமது இல்லத்திற்குக் கூட்டி வர முடிந்ததென்றால், அவர் தீர்க்கதரிசனத்தின் செயல் விளைவைக் குறைக்கலாம் மற்றும் ஒருவேளை வடக்கு ராஜ்யத்தில் தம்மை ஒரு முக்கிய மனிதராக்கிக் கொள்ளலாம். இது அவர் ஒரு வெற்றியாளராவதற்கு அவருக்குக் கிடைத்த வாய்ப்பாய் இருந்தது.

பல கருத்துக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பினும், முதிய தீர்க்கதரிசியின் நோக்கங்கள் என்னவாக இருந்தன என்பதைக் கற்பனைசெய்ய மாத்திரமே முடியும். அவர் இவரிடத்தில் “பொய்” உரைத்தார் என்பதை நாம் அறிகின்றோம். அந்த சத்தியம், ஒப்புக்கொள்ளப்பட வேண்டும், அதுவே நாம் காணவேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகின்ற பிரதான சிந்தனையாக உள்ளது.